# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2114/26 - 2019 මාර්තු මස 13 වැනි බදාදා - 2019.03.13

*2114/26 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 13 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

*ச. அ. இல. : பிஎஸ்/சிஎஸ்ஏ/00/1/14/6*

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி அதிமேதகு மைத்திரிபால சிறிசேன அவர்களினால்**

முத்திரை

மைத்திரிபால சிறிசேன

1. கௌரவ அபேரத்ன ஹேரத் முதியன்சேலாகே உபாலி அபேரத்ன அவர்கள், ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி
2. கௌரவ திருமதி சரோஜினி குசலா வீரவர்த்தன அவர்கள், ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி
3. திரு. எம். கே. டி. விஜய அமரசிங்க அவர்கள், ஓய்வுபெற்ற பிரதிப் பொலிஸ் மா அதிபர்

ஆகியோருக்கு,

*வாழ்த்துக்கள் !*

விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் (393 ஆம் அத்தியாயம்) 2 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக 2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 14 ஆந் திகதிய அதிகாரப் பத்திரத்தின் மூலம் என்னால் விசாரணை ஆணைக்குழுவொன்று தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் ;

மேலும் சொல்லப்பட்ட விசாரணை ஆணைக்குழுவின் ஆணையாளர்களான ஓய்வுபெற்ற கணக்காய்வாளர் அதிபதி திரு. பஸ்துன்கோரளே ஆரச்சிகே பேமதிலக அவர்கள் மற்றும் ஓய்வுபெற்ற அமைச்சுச் செயலாளர் திரு. லலித் ஆர். டி. சில்வா அவர்கள் தமது பதவிகளிலிருந்து கேட்டு விலகியுள்ளதாதலாலும் ;


1A - G 29384 — 387 (2019/03)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*மேலும், அதனால் ஏற்பட்ட வெற்றிடங்களை நிரப்பவேண்டிய தேவை இனங்காணப்பட்டுள்ளதாதலாலும் ;*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகிய நான், விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் 3 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, ஓய்வுபெற்ற அமைச்சுச் செயலாளர் திரு. டபிள்யு. கே. கே. குமாரசிறி மற்றும் ஓய்வுபெற்ற பிரதிக் கணக்காய்வாளர் அதிபதி திரு. எம். பி. தர்மவர்த்தன ஆகியோரின் விவேகம், திறமை, நேர்மை என்பன பற்றி மிகுந்த நம்பிக்கையும் பற்றுறுதியும்கொண்டு மேற்போந்த அதிகாரப்பத்திரத்தின் வண்ணம் தாபிக்கப்பட்ட விசாரணை ஆணைக்குழுவின் ஆணையாளர்களாக இத்தால் நியமிக்கின்றேன்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலாஞ்சனையின் கீழ் இரண்டாயிரத்துப்பத்தொன்பதாம் ஆண்டு மாச்சு மாதம் 12 ஆம் நாளாகிய இன்று கொழும்பில் அளிக்கப்பட்டது.*

*அதியுத்தமனாரின் ஆணைப்படி,*

*உதய ஆர். செனெவிரத்ன,*
*சனாதிபதியின் செயலாளர்.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*